8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

106. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய (தலைவி மற்றும் உறுப்பினர்களுக்கான மதிப்பூதியம், படிகள் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகளை இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந-3) துறையின் 18-12-2013 ஆம் நாளிட்ட 105 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/2008) 20(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

107. 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய (குழுக்களின் இணை உறுப்பினர்களுக்கு வழங்கத்தக்க படிகள்) விதிகளை இயற்றியது குறித்து சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந-3) துறையின் 18-12-2013 ஆம் நாளிட்ட 106 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/2008) 20(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

108. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

109. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

289. மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2014-2015. (தமிழ், ஆங்கிலம்)

290. கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய செயல்முறைத் திட்டம், 2013-2014. (தமிழ், ஆங்கிலம்)